**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF IV ADDITIONAL CITY CIVIL COURT,**

**CHENNAI-600 104.**

**O.S.No.3441 / 2024**

**Deposition of witness for PW-1**

பெயர் : R. Muruganandham **02.03.2026**
தந்தை பெயர் : K. Rajapandi
முகவரி : No.9F/39, Parasuram Eswaran Kovil Main Street, Ayanavaram, Chennai.
வயது : 63 years.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02nd day of March, 2026 .

---

**02.03.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**PW1 –** பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் வாதி அயன்புரம் வியாபாரிகள் நல சங்கத்தில் கொரோனா காலத்தில் President தலைவராக பொறுப்பேற்றுக்கொண்டேன். அதற்கு முன்பாக நான் சங்கத்தில் 4,5 வருடங்களாக துணை செயலாளராக இருந்தேன். பிரதிவாதி தாவா முதல்தளத்தில் மண்டபத்தில் வாடகைக்கு வருவதற்கு முன்பு சங்கத்தின் நிர்வாகம் அதனை பராமரித்து வந்தார்கள். பிரதிவாதிக்கு முன்பாக நான்தான் மண்டபத்தை நடத்திவந்தேன் என்று RLTOP வழக்கில் சாட்சியம் அளித்துவிட்டு தற்பொழுது இவ்வழக்கிற்காக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் வாதி சங்கத்தில் தலைவராகி சுமார் 6 வருடங்கள் ஆகிவிட்டது என்றால் சரிதான். நான் வாசாஆ.1 முதல் 3 வரையுள்ள வாடகை ஒப்பந்தங்களை பிரதிவாதிக்கு போடும்போது நான் சங்கத்தின் துணை செயலாளராக இருந்தேன்

என்றால் அந்த ஒப்பந்தங்கள் போட்டது எனக்கு தெரியாது. ஆனால் நான் சங்கத்தின் துணை செயலாளராக இருந்தேன். எங்களுடைய அலுவலகம் தாவா கட்டிடத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் தலைவராவதற்கு முன்பு வரை தாவா கட்டிடத்திற்கு சங்க Meeting க்கு மாதத்தில் ஒருநாள் வருவேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் இருந்து 300 மீட்டர் தூரத்தில் நான் கடை வைத்துள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ.2 ல் Clause 8 ல் மின்சார கட்டணத்தை மட்டும் வாடகைதாரர்தான் செலுத்தவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொத்துவரி மற்றும் Water and Sewerage charges ஆகியவற்றை Landlord தான் செலுத்தவேண்டும் என்றால், சொத்துவரி மட்டும் நாங்கள் கட்டுவோம், Water and Sewerage charges ஐ யார் வாடகைக்கு இருக்கிறார்களோ அவர்கள் தான் செலுத்துவார்கள். நான் துணை செயலாளராக இருந்தபோது Water and Sewerage charges செலுத்தவேண்டும் என்று பிரதிவாதிக்கு நான் கடிதம் மூலம் தெரியபடுத்தினேனா என்றால், Agreement போட்டதே எனக்கு தெரியாது. அந்த Party Hall லில் 300 பேர் உட்காரலாம். அந்த Party Hall சுமார் 2000 சதுரஅடி பரப்பளவு கொண்டது. RLTOP வழக்கில் நான் சாட்சி சொல்லும்போது, பார்ட்டி ஹாலில் சுமார் 75 நபர்கள் மட்டுமே உட்கார இடம் உள்ளது என்று சாட்சியம் அளித்துவிட்டு, தற்போது பொய்யாக 300 பேர் உட்காரலாம் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாசாஆ.7 ல் அந்த இடம் கோயிலுக்கு சொந்தமானது என்றும், அது 1400 சதுர அடி மட்டுமே என்று கூறிவிட்டு தற்போது 2000 சதுரஅடி என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அதில் கார் பார்க்கிங் இடமும் சேர்த்துதான் பிரதிவாதிக்கு வாடகைக்கு விட்டுள்ளோம். அந்த கார் பார்க்கிங் இடம் ஒரு பில்டிங் தள்ளி உள்ளது என்றால் சரிதான். அந்த கார்பார்க்கிங் இடம் கோயிலுக்கு சொந்தமான இடம், சுமார் 1056 சதுரஅடி கொண்டது என்றால் சரிதான். அந்த 1056 சதுரஅடி சரசு என்பவருக்கு கோயில் கொடுத்த இடம் என்றால் சரிதான். தாவா

கட்டிடம் கோயிலுக்கு சொந்தமான 1402 சதுரஅடி மற்றும் கார்பார்க்கிங் 1056 சதுரஅடியும் கோயிலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். வாசாஆ.7 ல் 1402 சதுரஅடிக்கு ரூ.9,15,940/– தரை வாடகை செலுத்தவேண்டும் என்று கோயில் எங்களுக்கு நோட்டீஸ் அனுப்பி உள்ளது என்றால் அதனை நான் வாங்கவில்லை. பிரதிவாதி தான் வாங்கினார். இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் பிரதிவாதி மீது புகார் கொடுத்து காவல் நிலையத்தில் இருந்து மேற்படி ஆவணத்தின் நகலைப் பெற்று தாக்கல் செய்துள்ளேன். வாசாஆ.7 ஆவணத்துடன் பிரதிவாதி 2 ஆவணங்களை கவரிங் லெட்டருடன் எங்களுக்கு அனுப்பி இருக்கிறார் என்றால் சரிதான். வாசாஆ.7 ல் 1056 சதுரஅடி இடத்திற்கு ரூ.7,02,908/– தரைவாடகை செலுத்தவேண்டும் என்று கோயில் எங்களுக்கு அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். தரை வாடகை கட்டவில்லை என்று கோயில் இன்றுவரை பேனர் வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். 2 நோட்டீஸில் சொல்லியுள்ளபடி நான் ரூ.9,15,940/– மற்றும் ரூ.7,02,908/– தரைவாடகைகளை கோயிலுக்கு செலுத்தவில்லை என்றால் சரிதான். இந்த 2 நோட்டீஸுகளும் 05.03.2022 ல் கொடுக்கப்பட்டவை என்றால் சரிதான். மேற்கண்ட இரண்டு சொத்துக்களுக்கும் இன்று வரையில் பூபாலன் மற்றும் சரசு ஆகியோர் பெயரில் தான் தரைவாடகை பதிவு உள்ளது என்றால் சரிதான். சொத்துவரி மற்றும் தண்ணீர் வரி ஆகியவை வாதி சங்கத்தின்பெயரில்தான் உள்ளது. தாவா கட்டிடத்தில் Corporation and CMDA – Building and Planning Permission வாங்காமலேயே கட்டிடத்தை கட்டியுள்ளோம் என்றால் எனக்கு தெரியாது. சுமார் 25 வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்டது.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

//SD//

IV Addl. Sessions Judge.
02.03.2026 IV Additional Court.